# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**திருச்சிராப்பள்ளி - 620 024**

## பெரியார் விருது செய்திக் குறிப்பு

பாரதிதாசன் பல்கலைக்கழகம் பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்களின் கொள்கைகளை பரப்பி வரும் பெரியாரியல் சிந்தனையாளர்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கி கௌரவித்து வருகிறது. அதன்படி (1) மூத்த பெரியாரியல் அறிஞர் ஒருவருக்கு **'பெரியார் சிறப்பு விருது'** மற்றும் பொற்கிழி ரூ.1,00,000 (ஒரு லட்சம் ரூபாயும்), (2) பெரியாரியல் அடிப்படையில் சமூகப்பணியாற்றுகின்ற ஒருவருக்கு **'பெரியார் விருது'** மற்றும் பொற்கிழி ரூ.50,000 (ஐம்பதாயிரம்), (3) பெரியாரியல் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்பட்ட நூல்களில் சிறந்த ஒரு நூலின் ஆசிரியருக்கு **'பெரியார் பரிசு'** மற்றும் பொற்கிழி ரூ.50,000 (ஐம்பதாயிரம்) கடந்த ஐந்து ஆண்டுகளாக வழங்கிச் சிறப்பித்தது.

அதன்படி, இந்த வருடமும் பெரியாரின் கொள்கைகளை மக்களிடையே பரப்பிச் சமூக தொண்டாற்றி வரும் பெரியாரியல் சிந்தனையாளர்களுக்கு, பெரியார் பிறந்தநாள் விழாவின் போது பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் **பெரியார் சிறப்பு விருது, பெரியார் விருது** வழங்கிச் சிறப்பிக்கப்பட உள்ளது. மேலும், 2018ஆம் ஆண்டில் **பெரியார் சிந்தனைகள்** குறித்து எழுதி வெளியிடப்பட்ட சிறந்த நூல் ஒன்றுக்கும் பரிசு வழங்கப்படவுள்ளது. எனவே, தகுதியுடையோரைத் தேர்வு செய்ய ஏதுவாகப் பெரியாரியல் சிந்தனையாளர்கள் பற்றிய விவரக் குறிப்பினையும், 2018ஆம் ஆண்டில் பெரியார் குறித்து வெளியிடப் பெற்ற நூலின் 2 படிகளையும் **"இயக்குநர் (பொ.), பெரியார் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024"** எனும் முகவரிக்கு **16.08.2019** தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பதிவாளர்**